சார்பு நீதிமன்றம், மேலூர்

OS 266/2023

| | |
|---|---|
| பெயர் | : வள்ளி |
| தகப்பனார் பெயர் | : |
| கணவர் பெயர் | :பெரியசாமி |
| வயது | :50 |
| கிராமம் | :கள்ளந்திரி, |
| வட்டம் | :மதுரை |
| தொழில் | :விவசாயம் |

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

31.07.2025

வா.சா.1 முதல் விசாரணை:

நான் இந்த வழக்கில் 3ம் வாதி. என்னுடைய முதல் விசாரணையை எழுத்து வடிவ பிரமாண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் கண்ட சங்கதிகள் என்னால் சொல்லப்பட்டது தான். அதில் கண்ட சங்கதிகளை எல்லாம் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். 11.08.1966 தேதியிட்ட என் தந்தை ஆண்டி அவர்களுக்கு எழுதி கொடுக்கப்பட்ட கிரைய பத்திரம் அசல் வா.சா.ஆ.1. 18.08.1966 தேதியிட்ட என் அப்பா பெயருக்கு எழுதி கொடுக்கப்பட்ட கிரைய பத்திரம் அசல் வா.சா.ஆ.2. என் தந்தை ஆண்டி அவர்களுடைய இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.3. என் தாயார் மீனாட்சி அவர்களின் இறப்பு சான்றிதழ் வா.சா.ஆ.4. என் தந்தை ஆண்டி அவர்களின் வாரிசுதாரர் சான்றிதழ் வா.சா.ஆ.5. மாவட்ட வருவாய் அலுவலர் முன்பாக இந்த வழக்கின் 1ம் பிரதிவாதி கொடுத்துள்ள மேல்முறையீட்டு மனு ஒளிநகல் வா.சா.ஆ-6. வழக்கு சொத்துக்குரிய வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.7. மாவட்ட ஆட்சியர் அலுவலகம் மதுரையில் இருந்து 1ம் பிரதிவாதிக்கு அனுப்பப்பட்ட விசாரணை அறிவிப்பு வா.சா.ஆ.8. வில்லங்க

சான்றிதழ் வா.சா.ஆ-9. வாதிகள் தரப்பில் கொடுக்கப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.10. அஞ்சல் ரசீது வா.சா.ஆ.11. 1ம் பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பு வா.சா.ஆ.12. வாதிகள் தரப்பில் 3ம் பிரதிவாதிக்கு கொடுக்கப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்பு வா.சா.ஆ.13. அஞ்சல் ரசீது வா.சா.ஆ.14. அதை 3ம் பிரதிவாதி பெற்று கொண்டதற்கான அஞ்சல் ஒப்புதல் அட்டை வா.சா.ஆ.15. 1ம் பிரதிவாதி பாண்டியம்மாள் அவர்கள் வழக்கு சொத்தை உடையப்பன் இந்த வழக்கின் 2ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்தது தொடர்பான கிரைய பத்திரம் கணினி பதிவிறக்கம் நகல் வா.சா.ஆ-16.

(குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

SAMUNDESWARIPRABHA Digitally signed by SAMUNDESWARIPRABHA Date: 2025.07.31 18:07:03 +0530

Sub Judge
Melur